රාජ්‍ය පරිපාලන සහ ස්වදේශ කටයුතු අමාත්‍යාංශය
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND HOME AFFAIRS
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
Website : www.pubad.gov.lk

දුරකථන / தொலைபேசி / Telephone : (94) 011-2696211-13
ෆැක්ස් / பெக்ஸ் / Fax : (94) 011-2695279
ඊ මේල් / இ-தபால் / E - mail : secretary@pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No : COM2/TRANS/03/0013
ඔබේ අංකය / உமது இல / Your No :
දිනය / திகதி / Date : 2009.12.10

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அதிபர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், யாவருக்கும்

<u>2010 வருடாந்த இடமாற்ற மீளாய்வு குழுவின் தீர்மானங்கள்</u>
<u>அரச முகாமை உதவியாளர் சேவை</u>
<u>இணைந்த சேவை</u>

2010 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்ற கட்டளைகளை விடுத்து தற்போது தங்களுக்கு அனுப்பியுள்ள எனது சமஇலக்க மற்றும் 2009.10.26 ஆந் திகதிய கடிதம் மற்றும் உரிய இடமாற்ற பட்டியலின் பால் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அவ் இடமாற்றங்கள் தொடர்பில் எனக்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீடுகள் தொடர்பாக இடமாற்ற மீளாய்வு குழுவின் தீர்மானங்களை இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன்.

03. 2010 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் சனாதிபதி செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட SP/SB/06/09 ஆம் இலக்க மற்றும் 2009 நவம்பர் மாதம் 26 ஆந் தேதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட எனது சமஇலக்க மற்றும் 2009.12.02 ஆந் தேதிய கடிதம் மூலம் 2010 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றங்கள் மறு அறிவித்தல் பிறப்பிக்கும் வரை பிற்போடப்பட்டுள்ளது. அதன் படி இக் கடிதம் மூலம் அறிவிக்கப்படும் இடமாற்றங்களும் மீளாய்வு குழுத் தீர்மானங்களும் பிற்போடப்பட்ட வருடாந்த இடமாற்றங்கள் செல்லுபடியாகும் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் என அறியத் தருகின்றேன். அதன் படி தங்களது அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் பணியாற்றும் இடமாற்றங்கள் பெற்றுள்ள அலுவலர்கள் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்கும் வகையில் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

04. வருடாந்த இடமாற்றங்களின் கீழ் என்னால் விடுக்கப்பட்டுள்ள இடமாற்ற கட்டளைகளுக்கு மேலதிகமாக திணைக்களங்கள் அல்லது அமைச்சுக்களுக்கிடையிலான உள்ளக இடமாற்ற கட்டளைகளின் கீழ் எவரேனுமொரு அலுவலரொருவருக்கு இடமாற்றமொன்று கிடைத்திருப்பினும், இந்த மீளாய்வுக் குழுத் தீர்மானங்களினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் 2009.10.26 ஆந் திகதிய இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இடமாற்ற கட்டளையை நடைமுறைப்படுதல் வேண்டுமென்பதை கவனத்தில் கொள்ளவும்.

05. மேலும் குறித்த திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்கக் கூடியதாக தற்போது இடமாற்ற கட்டளைகளை பெற்றுள்ள அலுவலர்களை அவர்களது பதிலாளர் வரும் வரை தடுத்து வைத்திராது தங்களது சேவை நிலையத்திலிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

பி.பீ.பீ.எஸ். அபேகுணரத்ன
இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகம்.